අධ්‍යාපන, උසස් අධ්‍යාපන සහ වෘත්තීය අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு
Ministry of Education, Higher Education and Vocational Education

# ஊடக வெளியீடு

## கல்விப் பொதுத் தராதரப் பத்திர ( உயர் தர)ப் பரீட்சை - 2025

2025 கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை 2025 நொவம்பர் மாதம் 10 ஆம் திகதி தொடக்கம் டிசெம்பர் மாதம் 05 ஆம் திகதி வரை நடாத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் 2025 ஜுன் மாதம் 26 ஆம் திகதி தொடக்கம் ஜுலை மாதம் 21 ஆம் திகதி வரை நிகழ்நிலையில் (online) கோரப்பட்டுள்ளன என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

02. அதற்கமைய பாடசாலைப் பரீட்சார்த்திகளின் விண்ணப்பப்படிவங்கள் அதிபர் ஊடாகவும், தனிப்பட்ட விண்ணப்பதாரிகள் தனிப்பட்ட முறையிலும் உரிய அறிவுறுத்தல்களுக்கமைய நிகழ்நிலையில் விண்ணப்பித்தல் வேண்டும்.

03. தனிப்பட்ட விண்ணப்பதாரிகள் இப் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்காக தமது தேசிய அடையாள அட்டை எண்ணைப் பயன்படுத்துதல் வேண்டும்.

04. இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளங்களான www.doenets.lk அல்லது www.onlineexams.gov.lk/eic இற்குப் பிரவேசித்து உரிய அறிவுறுத்தல்களை நன்கு வாசித்து அதற்கமைய சரியாக விண்ணப்பித்தல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தின் அச்சுப் பிரதியொன்றைப் பெற்று, தேவையான சந்தர்ப்பத்தின் போது சமர்ப்பிப்பதற்காக தமது பொறுப்பில் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள வேண்டும். பாடசாலைப் பரீட்சார்த்திகளின் விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதற்காகப் பயன்படுத்த வேண்டிய பயனர் பெயர் (User Name), கடவுச்சொல் (Password) என்பன பாடசாலை அதிபர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

**2025 ஜுலை மாதம் 21 ஆம் திகதி நள்ளிரவு 12.00 மணிக்குப் பின்னர் இப் பரீட்சைக்கான விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க முடியாது. எக்காரணத்திற்காகவும் விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி நீடிக்கப்படமாட்டாது என்பதையும் அறியத்தருகின்றேன்.**

05. இது தொடர்பாக ஏதேனும் விசாரணை இருப்பின் பின்வரும் தொலைபேசி இலக்கங்கள் அல்லது மின்னஞ்சல் ஊடாகத் தொடர்பு கொள்ள முடியும்.

தொலைபேசி இலக்கம் - 0112784208, 0112784537, 0112786616
நேரடி அழைப்பு இலக்கம் - 1911
மின்னஞ்சல் முகவரி - gcealexam@gmail.com

ஏ.கே.எஸ். இந்திகா குமாரி லியனகே
பரீட்சை ஆணையாளர் நாயகம்

இலங்கை பரீட்சைத் திணைக்களம்
பெலவத்தை, பத்தரமுல்ல.
2025 ஜுன் மாதம் 25 ஆம் திகதி